# சுவாமி தயானந்தா கலை & அறிவியல் கல்லூரி

# மஞ்சக்குடி


முனைவர். பா. கிருஷ்ணமூர்த்தி

தமிழ்த்துறை


பாடத் தலைப்பு – தண்டியலங்காரம், நன்னூல்


பாடத் தயாரிப்பு

முனைவர். பா. கிருஷ்ணமூர்த்தி.

## 5. தண்டியலங்காரம்

அணியிலக்கணத்திற்கென்றே அமைந்த நூல்களுள் முதன்மையானதும் இன்றுவரை அணியிலக்கணத்திற்கென பயிலப்பட்டு வரும் நூல் தண்டியலங்காரமாகும். தண்டி என்னும் புலவரால் இயற்றப்பட்ட அணி இலக்கண நூலாதலால் இந்நூல் தண்டியலங்காரம் என்று அழைக்கப்படுகிறது. ஐந்திலக்கண மரபில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற அடிப்படையிலே பாகுபாடு செய்யப் பட்டுள்ளது.

### நூல் மரபுப் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூல்பெயர் | : | தண்டியலங்காரம் |
| நூலாசிரியர் | : | தண்டி |
| காலம் | : | 12 - ஆம நூற்றாண்டு |
| நூல்வகை | : | அணியிலக்கணம் |
| நூல் | : | வடமொழி மொழிபெயர்ப்பு |
| மூலநூல் | : | காவியதர்சம் |
| நூல்பிரிவு | : | பொதுவணியியல் (குணவணியியல்) பொருளியியல் சொல்லணியியல் (எச்சவியல்) |
| நூற்பாக்கள் | : | 126 |
| சிறப்புப் பெயர் | : | அணி அதிகாரம் |
| பதிப்பு | : | 1854 - நரசிங்கபுரம் வீரசாமி முதலியார் தண்டியலங்கார மூலம்.<br>1857 - தில்லையம்பூர்ச் சந்திரசேகர கவிராஜ பண்டிதர், தண்டியலங்காரம் மூலமும் உரையும்.<br>1873 - டி.இ.ஸ்ரீநிவாச ராகவாசாரியார் (பதி) தண்டியலங்கார சாரம்.<br>1874 - அ.வீரசாமி நாயுடு மருகரணவா. வரதராஜ் நாயுடு (பதி) தண்டியலங்கார மூலமும் சுப்பிரமணிய தேசிகரால் செய்யப்பட்ட உரையும்.<br>1886 அ. இராமசுவாமிகள் (பதி) தண்டியலங்கார மூலம். |

*1901 வை.மு. சடகோப இராமாநுசா சாரியர் (பதி) தண்டியலங்கார மூலம்.*

*உரைகள் : 1. 1857 - தில்லையம்பூர்ச் சந்திரசேகர கவிராஜர் பண்டிதர், தண்டியலங்கார மூலமும் உரையும்.*

*2. 1874 - வரதராஜுலு நாயுடு - சுப்பிரமணிய தேசிங்கரால் செய்யப்பட்ட உரை*

*வை.மு சடகோபராமாநுசாரியார் பதிப்பில் தண்டியலங்கார மூலமும் பழைய உரையும்.*

**நூலாசிரியர்**

*தண்டியலங்காரத்தை இயற்றியவர் தண்டி என்னும் தமிழ்ப் புலவர் ஆவார். இவர் வடமொழி நூலான 'காவ்யா தர்சத்தை மொழி பெயர்த்து தமிழில் தண்டியலங்காரத்தை எழுதினார். வடமொழி தண்டியாசிரியரின் காலம் கி.பி. 7-ஆம் நூற்றாண்டு ஆகும். தமிழ்த்தண்டியாசிரியர் கி.பி 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர்.*

*தண்டியாசிரியர் சோழ நாட்டினைச் சார்ந்தவர் என்பதையும் அம்பிகாபதியின் மகன் என்பதையும் தண்டியலங்காரச் சிறப்புப் பாயிரத்தின் வழியாக முடிகிறது.*

**'பூவிரி தண்பொழில் காவிரி நாட்டு**
**வம்பவிழ் தெரியல் அம்பிகாபதி**
**மேவரும் தவத்தினில் பயந்த**
**தாவரும் சீர்திருத்தித் தண்டியென் பவனே'**

*தண்டி என்னும் பெயர் தமிழ்கூறும் நல்லுலகத்தில் அறியப்பட்ட ஒரு பெயராகவே இருந்துள்ளது. அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராக தண்டி நாயனார் என்ற பெயரும் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். தண்டியாசிரியர் தொல்காப்பியம் முதலிய இலக்கண நூற் புலமை பெற்றவர் என்பதும், நாட்டிய கலையில் மிகுந்த ஈடுபாடு உடையவர் என்பதையும் பாயிரச் செய்யுளால் அறிய முடிகிறது.*

**'ஆடக மன்றத்து நாடக நவிற்றும்**
**வடநூல் உணர்ந்த தமிழ்நூற் புலவன்'**

*தமிழ்மொழியில் அலங்காரம் என்ற பெயரில் எழுதப்பட்ட முதல் நூல் தண்டியலங்காரமாகும்.*

## சமயமும் காலமும்

*தண்டியலங்காரத்தில் வரும் 350 க்கும் மேற்பட்ட உதாரணச் செய்யுள்களை தண்டியாசிரியரே இயற்றினார் என்றும் கூறுவர். பிரயோக விவேக நூலாசிரியர், தண்டியாசிரியர் மூலோதாரணமும் காட்டினாற் போல யாமும் உரையெழுதிய அல்லது மூலோதாரணமும் காட்டினாம் என்று கூறியிருப்பதில் இருந்து இந்நூலாசிரியரே மூலமும் உதாரணச் செய்யுளும் இயற்றினார் என்பதை அறியலாம்.*

*தண்டியலங்கார உதாரணச் செய்யுள் செய்யுள் பலவற்றினுள் அன்பாயச் சோழன் என்னும் அரசனைப் பாராட்டி பாடல் இயற்றியுள்ளதால் இவர் அனபாயச் சோழன் காலத்தவர் என்பதை அறிந்து கொள்ளலாம். இரண்டாம் குலோத்துங்கச் சோழனையே அனபாயச் சோழன் என்று அழைப்பர். இரண்டாம் குலோத்துங்க காலம் கி.பி.12-ஆம் நூற்றாண்டு ஆகும்.*

**'மூவாத் தமிழ்பயந்த முந்நூல் முனிவாழி**
**ஆவாழி வாழி அருமறையோர். காவிரி நாட்டு**
**அண்ணல் அனபாயன் வாழி, அவன் குடைக்கீழ்**
**மண்ணுலகில் வாழி மழை"**

*என்ற பாடல் மூலம் இவரின் காலம் கி.பி 12-ஆம் நூற்றாண்டு என்று கூறலாம். உதாரணச் செய்யுளர்கள் பலவற்றில் சிவபெருமானைப் பற்றிப் பாடியிருப்பதால் இந்நூலாசிரியர் சைவசமயத்தைச் சார்ந்தவர் என்று கூறலாம்.*

## மொழிப்பெயர்ப்பு நூல்

*வடமொழியில் இயற்றப்பட்ட காவ்யா தர்சத்தினை மொழி பெயர்த்து தமிழில் தண்டி இயற்றிய நூலே தய்டியலங்காரமாகும். இந்நூலின் சிறப்புப் பாயிரத்தில் 'காவ்யா தர்சத்தைப் பற்றி எதுவுமே கூறவில்லை.*

**'பன்னிரு புலவரின் முன்னவன் பகர்ந்த**
**தொல்காப் பியநெறி பல்பாப் பியத்தும்**
**அணிபெறும் இலக்கணம் அரிதினில் தெரிந்து**
**வடநூல் வழிமுறை மரபினில் வழாது'**

*இந்நூல் தொல்காப்பிய இலக்கண நெறியினையும் நாட்டிய இலக்கண பண்புகளை அடியொற்றியும் எழுதப்பட்ட மொழிபெயர்ப்பு நூலாகும்.*

## அணியதிகாரம்

இந்நூலுக்குத் தண்டியலங்காரம் என்னும் பெயர் பிற்காலத்தில் வழங்கப்பட்டது என்பதைத் தண்டியலங்கார உரையில் இருந்து அறிந்து கொள்ளலாம்.

இவ்வதிகாரம் என்ன பெயர்த்தோ எனின் அணியினது இலக்கணம் உணர்த்தினமையின் அணியதிகாரம் என்னும் பெயர்த்து என்று கூறப்பட்டுள்ளது. இந்நூலுக்கு அணியதிகாரம் என்னும் பெயரே முதலில் வழங்கப்பட்டது என்பதை அறியலாம்.

## நூல் அமைப்பு முறை

தண்டியலங்காரம் மூன்று இயல்களை உடையதாகும். அவை,

1. பொதுவணியியல்
2. பொருளணியியல்
3. சொல்லணியியல்

பொதுவணியியலை குணவியல் என்றும், சொல்லணியியலை எச்சவியல் என்றும் அழைப்பர். இந்நூல் 126 நூற்பாக்களை உடையதாகும். பொதுவணியியலில் தற்சிறப்புப் பாயிரம் ஒன்றுடன் சேர்த்து 26 நூற்பாக்களும் பொருளணியியலில் காப்புச் செய்யுள் ஒன்றுடன் சேர்த்து 65 நூற்பாக்களும், சொல்லணியியலில் 35 நூற்பாக்களும் உள்ளன.

| வ.எண் | இயல்கள் | நூற்பாக்கள் |
|---|---|---|
| 1. | பொதுவணியியல்<br>(சிறப்புப் பாயிரம் உள்பட) | 26 நூற்பாக்கள் |
| 2. | பொருளணியியல்<br>(காப்புச் செய்யுள் உள்பட) | 65 நூற்பாக்கள் |
| 3. | சொல்லணியியல் | 35 நூற்பாக்கள்<br>126 நூற்பாக்கள் |

## பொதுவணியியல்

பொதுவணியியல் ஒரு தற்சிறப்புப் பாயிரம் 26 நூற்பாக்கள் உள்ளன. செய்யுளின் வகை, காப்பிய இலக்கணம் செய்யுள் நெறி போன்றவை முதல் இயலில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

"செய்யுள் என்பவை தெரியுற விரிப்பின்
முத்தகம் குளகம் தொகை தொடர்நிலையென
எத்திறத் தனவும் ஈரிரண்டாகும்"

*என்று நான்கு செய்யுள் வகையனையும், காப்பியத்தின் இலக்கணத்தை,*

'அறம் முதல் நான்கீனும் குறைபாடுடையது
காப்பிய மென்று கருதப்படுமே' (நூ - 10)

*என்று எடுத்துக் கூறுகிறது.*

## பொருளணியியல்

*பொருளணியியல் ஒரு காப்புச் செய்யுள் உள்ளிட்ட 65 நூற்பாக்கள் உள்ளன. தன்மையணி முதல் பாவிக அணி இறுதியாக முப்பத்துதைந்து அணிகளும், அவற்றின் வகைகளையும் எடுத்துக் கூறுகிறது. தன்மையணியின் இலக்கணத்தை*

"எவ்வகைப் பொருளும் மெய்வகை விளக்குப்
சொல்முறை தொடுப்பது தன்மை யாகும்"
என்றும் பாவிக அணியினை,
"பாவிக என்பது காப்பியப் பண்பே" (நூ.91)

*என்றும் எடுத்துக் கூறுவதோடு, முப்பத்தி ஐந்து பொருளணியின் வகையினையும் எடுத்துக் கூறுகிறது.*

"தன்மை உவமை உருவகம் தீவகம்
பின்வரு நிலையே முன்ன விலக்கே
வேற்றுப் பொருள் வைப்பே வேற்றுமை விபாவனை
ஒட்டே அதிசயம் தற்குறிப் பேற்றம்
ஏது நுட்பம் இலேசம் நிரல்நிறை
ஆர்வமொழி சுவை தன்மேம்பாட்டு உரை
பரியாயம்மே சமாயிதம் உதாத்தம்
அரிதுணர் அவநுதி சிலேடை விசேடம்
ஒப்புமைக் கூட்டம் மெய்ப்பாடு விரோதம்
மாறுபடு புகழ்நிலை பரிவருத்தனையே
வாழ்த்தொடு சங்கீரணம் பாவிகம் இவை
ஏற்ற செய்யுட்கு அணி ஏழ் ஐந்தே" (நூ.28)

## சொல்லணியியல்

*சொல்லணியியலில் 35 நூற்பாக்கள் உள்ளன. மடக்கனி, அவற்றின் வகைகள், சித்திர கவி, வழுக்கள், வழுவமைதி பற்றி இவ்வியல் எடுத்துக் கூறுகிறது.*

சித்திரக் கவியின் வகையினை
"கோமூத்திரியே கூட சதுர்க்கம்

**மாலை மாற்றே எழுத்து வருத்தனம்**
**நாகபந்தம் வினா உத்தரமே**
**காதை சுரப்பே சுரந்துரைச் செய்யுள்**
**சக்கரம் சுழிகுளம் சருப்பதோ பத்தில்**
**அக்கரச் சுதகமும் அவற்றின் பால''** **(நூ. 98)**

*என்று எடுத்துக் கூறுகிறது. மொழிபெயர்ப்பு நூல் என்று தெரியாத அளவிற்கு சிறு காப்பியம், பெருங்காப்பிய இலக்கணத்தை விரிவாக எடுத்துக்கூறுகிறது. இந்நூல் எடுத்துக் காட்டுப் பாடலில்*

**''தன்னோர் இலாத தமிழ்''**

*என்று தமிழ்மொழியின் சிறப்பினையும் எடுத்துக்கூறுகிறது.*

## 6. நன்னூல்

நல் + நூல் = நன்னூல். இயல்பாகவே நல்ல இலக்கணமுடைய நூலாக அமைந்ததால் இந்நூலை 'நன்னூல்' என்றழைத்தனர். தொல்காப்பியத்தை அடியொற்றி இயற்றப்பட்ட பல்வேறு பட்ட இலக்கண நூற்களுள் இன்றுவரையும் போற்றப்பட்டு வரும் எளிமையான இலக்கண நூல் நன்னூலாகும். இலக்கண நூலான நன்னூலை அறியாதவர் என்னூலையும் அறியாதவர் ஆவார் என்பது மரபாகப் பின்பற்றப்பட்டு வருகிறது.

### நூல் மரபுக் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | நன்னூல் |
| நூலாசிரியர் | : | பவணந்தி முனிவர் |
| காலம் | : | கி.பி 1178 - 1218 |
| நூலாசிரியர் மரபு | : | |
| நூல்வகை | : | இலக்கணம் |
| நூற்பிரிவு | : | இரண்டு<br>எழுத்ததிகாரம் - 202 நூற்பாக்கள்<br>சொல்லதிகாரம் - 204 நூற்பாக்கள் |
| இயல்கள் | : | எழுத்ததிகாரம் = 5 இயல்கள்<br>சொல்லதிகாரம் = 5 இயல்கள் |
| நூற்பாக்கள் | : | 406 நூற்பாக்கள் |
| சமயம் | : | சமணர் |
| சிறப்புப் பெயர்கள் | : | பின்னூல் (தொல்காப்பியம் முன்னூல்)<br>தொல்காப்பியத்தைப் பின்பற்றியதால் பின்னூல் என்றழைக்கப்பட்டது |
| நூற்சிறப்புகள் | : | 1. சுவாமிநாத தேசிகர் நன்னூலின் சிறப்பை 'முன்னூ லொழியப் பின்னூல் பலவினுள்<br>எந்நூலாரும் நன்னூ லாருக்கு இணையோ என்னுந் துணிவே மன்னு' என்று கூறுகிறார். |

பதிப்பு : 1. 1835 - திருத்தணிகை விசாகப்பெருமாளையர் (பதி) கல்விவிளக்க அச்சுக்கூடம் சென்னை

2.1835 - தண்டவராய முதலியார் - இலக்கணப் பஞ்சகங்களில் நன்னூல் மூலமும் அகப்பொருள் மூலமும்

3. 1847 - இராமாநுச கவிராயர், நன்னூல் விருத்தியுறை

4. 1851 - களத்தூர் வேதகிரி முதலியார் - நன்னூல் காண்டிகையுரை

5. 1857 - ஆறுமுக நாவலர், நன்னூல் மூலமும் விருத்தியுரையும்

6. 1854 - நரசிங்கபுரம் வீரசாமி முதலியார் - நன்னூல் மூலம்

7. 1855 - தீலலையம்பூர்ச் சந்திர சேகர கவிராஜ பண்டிதர் நன்னூல் மூலமும் விருத்தியுரையும்.

8. 1855ே - சண்முகசுவாமி - நன்னூல் மூலப்பாடம்

9. 1857 - ஜி.யூ. போப்பையர் - நன்னூல் மூலமும் பொழிப்புரையும்

10. 1858 - இ.சாமுவேல்பிள்ளை - தொல்காப்பிய நன்னூல் மூலம்

11. 1861 - க.பே. சவுந்தரநாயக பிள்ளை, நன்னூற் சுருக்க உரைபாடம்

12. 1867 - சாலிவட்டீஸ்வர ஓதுவார் மூர்த்திகள் - நன்னூல் மூலமும் காரிகை மூலமும்

13.1873 - திருவெண்காடு ஆறுமுக சுவாமிகள் - நன்னூல் மூலமும் காண்டிகையுரையும்

14. 1874 - புரசபாக்கம் முனிசாமி முதலியார் - நன்னூல் மூலமும் காண்டிகையுரையும்

15. 1875 - ஏ.அருணாசல முதலியார் நன்னூல் மூலமும் காண்டிகையுரையும்

16. 1876 - சரவணபுரம் சண்முக முதலியார் நன்னூல் காண்டிகையுரை

17. 1880 - நல்லூர் ஆறுமுக நாவலர் - நன்னூல் காண்டிகையுரை

18. 1880 - கோ.இராசகோபாலபிள்ளை - நன்னூல் காண்டிகையுரை

19. 1880 - ஊ.புஷ்பரத செட்டியார் - நன்னூல் மூலமும் காண்டிகை உரையும்

20. 1886 - அ.இராமசுவாமிகள் - நன்னூல் மூலம்

21. 1876 - புஷ்பரத செட்டியார் - நன்னூல் மூலம்

22. 1886 - சிதம்பரம் பொன்னுசாமி முதலியார் - நன்னூல் மூலமும் காண்டிகை உரையும்

23. 1886 - ஊ.புஷ்பரத செட்டியார் - நன்னூல் மூலமும் காண்டிகை உரையும் பாகம் - 1

24. 1887 - ஊ.புஷ்பரத செட்டியார், நன்னூல் மூலமும் காண்டிகை உரையும் பாகம் - 2, சொல்லதிகாரம்

25. 1888 - இராயப்பேட்டை ஸ்ரீநிவாச முதலியார் - நன்னூல் காண்டிகை உரை

26. 1889 - திருமயிலை தெய்வ சிகாமணி முதலியார் - நன்னூல் மூலமும் காண்டிகை உரையும் விருத்தியுரையும்

27. 1889 - சை.ர.நவசிவாய செட்டியார் நன்னூல் மூலம்

28. 1899 - ஆறுமுக நாவலர் நன்னூல் மூலம்

29. 2892 - வை.மு. சடகோபராமாநுஜாசாரியர் - சே.கிருஷ்ணமாசாரியார், நன்னூல் மூலமும் காண்டிகை உரையும்

30. 1896 - திருநெய்த்தனம் சௌந்தர ராஜ அய்யங்கார், இலக்கணம் (நன்னூல் சுருக்கம்)

31.1898 - கா.ஸ்ரீ. கோபாலசாரியார் - நன்னூதல் மூலமும் காண்டிகை உரையும்

32. 1900 - பா.வாசுதேவ முதலியார் - நன்னூல் காண்டிகையுரை இன்றும் ஏராளமான புதிய புதிய உரைகளுடன் நன்னூல் பதிப்பிக்கப்பட்டு வருகிறது.

## நூலாசிரியர்

நன்னூலை பவணந்தி முனிவர் இயற்றினார். இந்நூலின் சிறப்புப் பாயிரத்தில்

“பொன்மதிற் சனகைச் சன்மதி முனியருள் பன்னரும் சிறப்பிற் பவணந்தி” என்று கூறப்பட்டுள்ளதால் பவணந்தியாரின் ஊர் சனகை எனப்படும் கனகாபுரம் என்பர். சனகாபுரத்தின் மரூஉச் சொல்லே ‘சனகை’ என்றும் கூறுவ ‘சனகை’ என்ற ஊர்ப் பெயர் ஒன்றுக்கு மேற்பட்டவை இருந்ததை சிற்றிலக்கியங்கள் எடுத்துக் கூறுகிறது.

* தொண்டை மண்டலச் சதகம் - பவணந்தி முனிவரைத் தொண்டை மண்டலத்தைச் சார்ந்தவர் என்கிறது.
* கொங்கு மண்டல சதகம் - பவணந்தி முனிவரைக் கொங்கு மண்டலத்தைச் சார்ந்தவர் என்கிறது.
* இந்த இரண்டு ஊர்களில் கொங்கு மண்டலத்தைச் சார்ந்தவர் என்பது பெரும்பாலான ஆய்வாளரின் கருத்தாகும்.

## நூலாசிரியரின் காலம்

நன்னூல் பாயிரச் செய்யுள் சீயகங்கன் என்ற அரசன் வேண்ட இந்நூல் இயற்றப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது.

**“கருங்கழல் வெண்குடைச் கார்நிகர் வண்கைத்**
**திருந்திய செங்கோல் சீயகங்கன்”**

சீயகங்கன் சங்க நாட்டை ஆட்சி செய்தவன். மூன்றாம் குலோத்துங்கச் சோழனுக்குக் கப்பம் கட்டியவனாகச் சீயகங்கன் இருந்ததால் காலம் கி.பி 1178 0 1218 ஆகும். எனவே பவணந்தியாரின் காலம் பன்ரெண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதி என்றும் 13 - ஆம் நூற்றாண்டின் முற்பகுதியாகும் என்பர்.

## நூல் அமைப்பு

நன்னூல் ஐந்திலக்கணநூல் என்று கூறுவர். சிறப்புப் பாயிரத்தில்

**“அரும்பொருள் ஐந்தைடயும் யாவரும் உணரத்**
**தொகை வகை விரியின் தருக எனத்”**

கூறப்பட்டுள்ளத்தில் இருந்து அறிந்து கொள்ளலாம். இருப்பினும் தற்போது எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என்ற இரண்டு பிரிவுகள் மட்டும் கிடைக்கிறது. இரண்டு ஐந்து இயல்களை உடையதாகும்.

| வ.எண் | எழுத்ததிகாரம் | நூற்பாக்கள் | சொல்லதிகாரம் | நூற்பாக்கள் |
|---|---|---|---|---|
| 1. | எழுத்தியல் | 72 | பெயரியல் | 62 |
| 2. | பதவியல் | 23 | வினையியல் | 32 |
| 3. | உயிரீற்றுப் புணரியல் | 53 | பொதுவியல் | 68 |

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | மெய்யீற்றுப் புணரியல் | 36 | இடையியல் | 21 |
| 5. | உருபு புணரியல் | 18 | உரியியல் | 21 |
| | மொத்த நூற்பாக்கள் | 202 | | 204 |

*இந்நூலில் 406 நூற்பாக்கள் உள்ளன. நூற்பாக்கள் அனைத்தும் ஆசிரிய யாப்பில் அமைந்துள்ளன.*

## நூல் சிறப்புகள்

*தமிழ் இலக்கணம் பயிலும் மாணவர்கள் பெரும்பாலும் நன்னூலையே கற்று வருகின்றன.*

*இலக்கணக் கொத்தின் நூலாசிரியர் இந்நூலின் சிறப்பை,*

**"முன்னூல் ஒழியப் பின்னூல் பலவினுள்**
**நன்னூலார் நமக்கு எந் நூலாரும்**
**இணையோ என்னும் துணிவே மன்னுக"**

*அழகுற விளக்கிக் கூறுகிறார்.*

* *தொல்காப்பியம் விரித்துக் கூறியதையும், தொகுத்துக் கூறியும், தொகுத்துக் கூறியதை விரித்தும் வகைப் படுத்திக் கூறுகிறார்.*

**"மொழிமுதல் காரணமாம் அணுத்தினர் ஒலி**
**எழுத்து அதுமுதல் சார்பு என இருவகைத்தே"**

* *நூற்பாக்கள் செறிவானவை பொருளாழம் மிக்கவை எடுத்தாளும் முறையும் சிறப்பானது.*

**"மக்கள் தேவர் நரகர் உயர்திணை**
**மற்று உயிர் உள்ளவும் இல்லவும் அஃறிணை"**

* *உம்மைத் தொகையின் இலக்கணத்தை*

**"எண்ணல் எடுத்தல் முகத்தல் நீட்டல்**
**எனும் நான்கு அளவையுள் உம் இலது அத்தொகை"**

* *இந்நூலின் சிறப்பை உணர்ந்த சங்கர நமச்சிவாயர்,*

**"பல்கலைக் குரிசில் பவணந்தி என்னும் புலவர் பெருமான்"**

*என்று பாராட்டிக் கூறுகிறார்.*

**உரையாசிரியர்கள்**

*நன்னூலுக்கு எராளமான உரைகள் தோன்றினும் மயிலைநாதர் ஆண்டிப் புலவர், சங்கர நமச்சிவாயர், சிவஞான முனிவர், கூழங்கைத் தம்பிரான், இராமநுச கவிராயர், விசாகப் பெருமாள் ஐயர், ஆறுமுக நாவலர், பவானந்தம் பிள்ளை, உள்ளிட்டேன் உரை எழுதியுள்ளனர், நன்னூலுக்கு விருத்தியுரையும், காண்டிகையுரையும் எழுந்துள்ளது.*